புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# க. மகுடபதி கவிதைகள் முன்வைக்கும் கல்விச் சிந்தனைகள்

**Jothilakshmy L.**
Ph.D. Research Scholar
Department of Tamil & Research Centre
Government College Chittur, Palakkad , Kerala – 678104

*ஆய்வுச்சுருக்கம்*

*புதுக்கவிதைத் தோன்றிய காலம் முதல், சமகாலத்தில் நடந்த சில சமூக அவலங்ககளையும், சமூகச் சிக்கல்களையும், இன்றைய கல்வி நிலையும் கவிதைகளில் பாடுபொருளாகக் கொண்டு வரத் தவரவில்லைக் கவிஞர்கள். சமூகத்தில் கல்வி இன்றியமையாத ஒன்றாகும். கல்வி ஒட்டுமொத்தச் சமூகமாற்றத்திற்கும் தேவையான ஒன்றாகத் திகழ்கிறது. தற்காலத்தில் கல்வியை ஒரு வியாபாரப் பொருளாக மாற்றி விற்கின்றார்கள். எனவே இன்றைய சமூகத்தில் சமகாலக் கல்வியின் முக்கியத்துவமும், அதில் பெற்றோர் ஆசிரியர்களின் பங்கும், சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் க.மகுடபதி அவர்களின் கவிதைகள் வாயிலாக எடுத்துரைக்கும் விதத்தில் இவ்வாய்வு அமைகின்றது.*

*முன்னுரை:-*

*இலக்கியம் மானிட வாழ்க்கையின் அடி நாதமாகத் திகழ்கிறது. அதனை படிப்பவரின் சிந்தனைக்கும், உணர்விற்கும், கற்பனைக்கும் தெவிட்டாத அமுதாக அமைகின்றது. மொழியை ஊடகமாகக் கொண்டு, சொற்றொடராக இயைந்து புது வடிவங்களைப் பெறுகின்றது. அவ்வடிவங்களுள் ஒன்று கவிதை. சமகாலத்தில் நடக்கும் சில அபூர்வ நிகழ்வுகளையும், சமூகத்தில் நடக்கும் அவலங்களையும் சமூகச் சவால்களையும் இன்றைய கல்வி நிலையினையும் கவிதைகளில் பாடு பொருளாகக் கொண்டு வரத் தவறுவதில்லை கவிஞர்கள். அவ்வகையில் இன்றைய கல்வி குறித்த சிந்தனைகள் கவிஞர் க. மகுடபதியின் கவிதைகளில் எடுத்தாளப்பட்டுள்ளமையை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

*கவிஞர் க. மகுடபதி*

*இவர் திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் புது ஆயக்குடி என்னும் சிற்றூரில் பிறந்தவர். தற்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இதுகாறும் "இங்கிதம் அறிந்த நிழல்கள்", "வான் நோக்கிப் பெய்யும் மழை", "பொதி சுமக்கும் நதிகள்" என மூன்று கவிதைத் தொகுப்புக்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.இவற்றில் 'வான் நோக்கிப் பெய்யும்ம் மழை' என்ற நூல், புதுச்சேரி படைப்பாளர் இயக்கம் 13-ம் ஆண்டு விழாவில் புதுப்பா நூல் போட்டியில் பரிசு பெற்றுள்ளது.*

*க.மகுடபதியின் கவிதைகள் சமூக அக்கறை மிளிர்பவை. கவிஞர் தன் பால்யத்தின் நினைவுகளை,சமூகத்தின் மீதான தன் விமர்சனங்களை, தனது அனுபவங்களைக் குறுங்கவிதைகளாக எழுதி உள்ளார். குறுங்கவிதைகளுக்குள் நெடுங்கால உணர்வுகளைக் கட்டியமைக்கிறார் என்றும் கூறலாம். மிக எளிய சொற்களில் சூழலியல் சிக்கல், சமூக ஏற்றத் தாழ்வு, தத்துவம், காதல், கல்வி எனப் பல்வேறு பாடுபொருள்களில் தன் கவிதைப் பரப்பை விரித்துள்ளார்.*

கல்வி

கல்வி மனித வாழ்க்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. மனிதன் வாழ்க்கையில் உயர்வான எண்ணங்களும் உன்னதமான குணங்களும் உடையனவாக விளங்க வேண்டுமாயின் கல்வி இன்றியமையாதது. ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். இதனை திருவள்ளுவர்,

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை''

(குறள் 400 )

என விளக்குகிறார்.

கல்வியே ஒரு மனிதனது அறிவுக்கண்களைத் திறக்கிறது. நன்மை, தீமைகளைப் பகுத்தறியும் ஆற்றலை உருவாக்கி வழி நடத்திச் செல்கிறது. எனவே கல்வி மிக அவசியமான ஒன்றாகும். ஒருவர் கொள்கின்ற கல்வி அவர்க்கு மட்டும் பயன்படுபவதாக இருக்கக் கூடாது. அந்தக் கல்வி இந்தச் சமூகத்திற்க்கும், நாட்டிற்கும் பயன் படும் வகையில் அமைய வேண்டும்.

கற்ற ஒருவர் நல்ல எண்ணங்கள் கொண்டு சிறந்த செயல்களைச் செய்ய வேண்டும், அதுவே கல்வியின் பயனாகும்.ஒருவர் தம் கல்வி அறிவினால், அறியாமையில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய முடியும். கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபிறகு, கற்ற கல்விக்குத் தக்கவாறு அந்த நெறியில் நிற்க வேண்டும் என்பதனை திருவள்ளுவர்,

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

(குறள் 391)

என்று எடுத்துரைக்கின்றார்.

எச்செயலையும் விட மிகப் புண்ணியச் செயல் கல்லாத ஒருவனுக்கு கல்வி போதிப்பதே என்பதனை,

''இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்ஆலயம்பதி நாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடிஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்...''

மகாகவி பாரதியார்

என்று பாரதியார் சுட்டிக்காட்டுகின்றார்.

இன்றைய கல்வி நிலை

அரசின் கல்விக் கொள்கைகள் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே செயல்படுத்தப்படுகின்றன. இதனைச் சரியான பாதையில் கொண்டு செல்பவர்களாக ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் விளங்குகிறார்கள். தரமான கல்வியே சமூக முன்னேற்றத்திற்கு ஆணிவேர்.

''வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத கல்வி குழந்தைகளின் மனநிலை, எதிர்பார்ப்பு, ஏக்கம், ஏற்றத் தாழ்வு நிறைந்த இந்தச் சமுதாயத்தில் அவர்கள் சந்திக்கும் இன்னல்கள், கலாச்சார ரீதியாக ஏற்படுத்தப்படும் புறக்கணிப்புகள் இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காமல் கற்பித்தலென்பது வெறும் இயந்திர கதியான ஒரு பணியாகும்.''

-(பாமா, விருட்சங்களாகும்விதைகள், பக்கம் )

என்கிறார். இவ்வாறு கல்வி என்பது சமூகத்தில் நடக்கக் கூடிய எல்லா நிகழ்வுகளுடனும் பொருத்திப் பார்க்கக்கூடிய ஒன்றாகும். இன்றைய கால கட்டத்தில் கல்வி என்பது ஒரு வியாபாரமாக மாறிவிட்டது. பணம் இருந்தால் கல்வி என்ற நிலை வந்து விட்டது. தமிழ் மொழிக்கல்வி என்பது பெரும்பாலான பெற்றோர்களின் விருப்பமாக இருப்பதில்லை. கடன் வாங்கியாவது குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அப்படி அவர்காளின் நிலையினை க. மகுடபதி தன் கவிதைகளில் பதிவு செய்கிறார்,

*" வகுப்புக்கு வெளியே*
*பிள்ளையும்*
*வட்டிக்கடை வாசலில்*
*பெற்றோரும்*
*நின்று கொண்டிருக்கிறார்கள்*
*பள்ளிக் கட்டணத்திற்கு*
*இவர்கள் வீட்டுவாசலில்*
*கனிவோடு காத்திருக்கிறது*
*இலவசத் தாய்மொழிக்கல்வி.."*

*(இங்கிதம் அறிந்த நிழல்கள், பக்கம் 24)*

*இவ்வாறான காலகட்டத்தில் கல்வியை பணம் கொடுத்துவாங்க ஆட்கள் இருக்கும் வரை அதைத் தந்திரமாக விற்கும் ஆட்களும் இருக்கத்தான் செய்வார்கள். மகுடபதி அவர்கள் போலவே கவிஞர் பூ.தனிக்ஷாபாரதி அவர்களும் தன்னுடைய ஹைக்கூ கவிதையில் இன்றைய கல்வி வியாபாரத்தைக் குறிப்பிடுகின்றார். சரஸ்வதி என்று கல்வி கற்பவர்களையும், சரஸ்வதி சிலையில் உள்ள சிலந்தி வலை என்று கல்வியை விற்கும் நிறுவனங்களையும் குறியீடாக் கூறியுள்ளார்.*

*"சரஸ்வதி சிலை*
*வீணையின் இடுக்குகளில்*
*சிலந்தி வலைகள்"*

*(புத்தனின் தலையில் 108 நத்தைகள், பக்கம் 38)*

*இக்கவிதை மகுடபதியின் கவிதையோடு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.*

*ஏட்டுக்கல்வியும் சமூகமும்*

*சமூகத்தில் நாம் முதல் மதிப்பெண் பெற்றிருந்தாலும் சமூகத்தில் வாழ அது மட்டும் போதாது. புத்தகத்தில் இருந்து கற்றுக்கொண்ட கல்வியை விட நம் வாழ்வில் சமூகத்தில் இருந்து இன்னும் நிறைய பாடங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டி உள்ளது. மேலும் முதல் மதிப்பெண் பெற்றவன் நன்றாக வாழ்வான், 35 மதிப்பெண் பெற்றவன் துன்பப்படுவான் என்றெல்லாம் சமூகம் போலியான ஒரு பிம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அதை மீறித் தான் வாழ்க்கை அமைகிறது என்பதை, கவிஞர் நயம்படச் சுட்டிக்காட்டுகின்றார்.*

*"பல விதங்களில்*
*வீழ்ந்து கிடக்கின்றன*
*சில சதங்கள்*
*நன்றாகத்தான் வாழ்கின்றன*
*35 மதிப்பெண்களும்*
*பள்ளிகளில் மட்டுமல்ல*
*தெருக்களிலும் கிடக்கின்றன*
*பாடங்கள்"*

*( பொதி சுமக்கும் நதிகள், பக்கம் 49)*

*ஆசிரியர்கள்*

*மாணவர்களின் அறியாமையைப் போக்கி அவர்களுக்கான எதிர்காலத்தினை அமைத்துத் தருவது தான் ஆசிரியரின் தலையாய கடமையாகக் குறிப்பிடுகின்றார் மகுடபதி. ஆசிரியர் கரும்பலகையில் எழுதி அழித்து எழுதி அழித்து பாடம் நடத்துகிறார். கரும்பலகையில் அழிக்கப்படுவது எழுத்துகள் என்ற பார்வையிலிருந்து மாறி அழிக்கப்படுவது மாணவர்களின் அறியாமை என்ற புதிய கோணத்தில்*

*"கரும்பலகையில் எழுதி*
*அழிக்கிறார் ஆசிரியர்*
*மாணவர்களின் அறியாமையை"*

*( வான் நோக்கிப் பெய்யும் மழை, பக்கம் – 12)*

*என்று கூறுகின்றார் கவிஞர்.*

சமூகத்தில் ஒரு மாணவன் எவ்வாறு கல்வியின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை வழி நடத்துபவர்கள் ஆசிரியர்கள். தொடக்கக்கல்வி கற்றுத் தரும் ஆசிரியர்கள் குழந்தைகளாகவே மாறி பாடம் கற்பிக்கின்றனர். அப்படி மாறும் போது குழந்தைகள் மனதில் ஆசிரியர்கள் மிக ஆழமாகப் பதிந்து விடுகிறார்கள். அவர்களின் ஒவ்வொரு செயலும் மாணவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கத் துவங்கிவ் விடுகிறார்கள். ஆசிரியர் குழந்தைகளை அடித்துப் பாடம் நடத்துவது கூட அவர்கள் மனதில் அழகாகப் பதிந்து விடுகிறது என்பதனை,

"பிரம்பை எடுத்து
அங்கும் இங்கும் அசைத்து
சுவற்றைத் தொட்டுத் தொட்டு
பொம்மைகளுக்கு
பாடம் நடத்துகிறாள் மகள்
உள்ளங் கையில் முதுகில்
அடிக்கடி அடிவாங்கும்
கரடிப் பொம்மைதான்
யாரென்றே தெரியவில்லை "

( வான் நோக்கிப் பெய்யும் மழை, பக்கம் 81)

என்று சுட்டிக்காட்டுகின்றார்.

குடும்பம்

ஒரு கவிதையில் மகுடபதி அவர்கள் கல்வி மூலம் கற்றுக் கொள்ளும் பாடங்களை விட தன் குடும்பத்தினரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் நிறைய உள்ளது என்கிறார். குடும்பம் என்பது பெற்றோர், குழந்தைகள், தாத்தாபாட்டி ஆகியோர் அடங்கிய ஒன்றாகும். தான் படிக்காவிட்டாலும் தம் பேரக் குழந்தைகள் படிக்க வேண்டும் என்று எண்ணும் தாத்தா பாட்டிகளிடம் இருந்து வாழ்க்கைக் குறித்த நிறைய பாடங்களைக் கற்ற வேண்டி உள்ளது. வாழ்க்கைப் பாடத்தை முதியவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை,

"பள்ளிப் பாடங்களை
சுமந்து வரும்
பேரப்பிள்ளைகளோடு
படிக்கத் தெரியாமல்
புத்தப் பைகளை
சுமந்துகொண்டு
தள்ளாத வயதில்
மூன்று காலூன்றி
நடந்து போகும்
முதுமையின்
பாதச் சுவடுகளே
பாடமாகி விடுகின்றன..."

( இங்கிதம் அறிந்த நிழல்கள், பக்கம் 15)

குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோர்களும் முக்கியக் காரணமாகின்றனர். குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்களே. பெற்றோர்களின் உழைப்பை நினைவில் கொண்டு ஒரு மாணவன் முன்னேற வேண்டும் தன் வளர்ச்சிக்கு தன் தந்தை படும் கஷ்டத்தை உணர்ந்த, வார்த்தைகளால் சொல்லி விட முடியாத வலியை உணர்ந்த குழந்தை முதல் மதிப்பெண் வாங்கத் தவறுவதில்லை என்கிறார் மகுடபதி.

"முதல் மதிப்பெண் பெற்ற மாணவனின்
முன்னேற்ற அறிக்கையில்
வெற்றித் திலகமாய் வீற்றிருக்கிறது
காப்புக் காய்த்த

*அப்பாவின் கைரேகை''*

*(பொதி சுமக்கும் நதிகள், பக்கம் 17)*

*ஒருவன் தான் கற்ற கல்வியினால் சமூகத்திற்கும் தன் குடும்பத்திற்கும் ஏதேனும் வகையில் உதவ வேண்டும். அவ்வாறு அவன் கற்ற கல்வியினால் தன்னை ஈன்றெடுத்த தாயைக் கூட அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அவன் கற்ற கல்வியினால் பயனொன்றும் இல்லை. பெற்றவர்களை சரிவர கவனிக்காதவர்கள் பெரும்பாலும் படித்தவர்களாய் இருப்பது இன்றைய சமூக அவலம். தாய் என்பவள் நாம் படித்து எடுக்க முடியாத மிகப்பெரிய புத்தகம். அவளிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய நிறைய. இதனை,*

*''பகுத்துண்டு*
*பல்லுயிர் ஓம்புதல்*
*என்றெல்லாம் படித்ததில்லை*
*குழந்தைக்கு சோறூட்டுவாள்*
*அருகில் விளையாடும்*
*குழந்தைகளுக்கும் சேர்த்தூட்டுவாள்*
*குருவிகளுக்கும்*
*கொஞ்சம் வைப்பாள்*
*அனைத்தும் முடியாவிட்டாலும்*
*அம்மாவையாவது*
*படித்து முடிப்பொம்*
*படித்தவர்கள் என்று*
*சொல்லிக்கொள்ள...''*

*(இங்கிதம் அறிந்த நிழல்கள், பக்கம் – 13)*

*என சுட்டிக்காட்டுகின்றார்.*

*குடும்பங்கள் கல்விக்குத் துணையாய் இருப்பதைப் பற்றிக் கூறிய கவிஞர், சமூகத்தில் உள்ள நிலவும் சில குடும்பங்கள் கல்விக்கு எதிராக, கல்விகற்கும் மாணாக்கர்க்கு எதிராக அமைந்திருக்கும் அவல நிலையினையும் குறிப்பிடுகின்றார். பெற்றோர்கள் குழந்தைகளின் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். ஆசிரியர்கள் என்ன தான் நல்ல ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்தாலும் மாணவனின் எதிர்காலம் வீட்டுச் சூழலில் தான் அடங்கியுள்ளது. குடும்பத்தில் சோகம், தனிமை, கணவன் மனைவி சண்டை, போதைக்கு அடிமை போன்றவற்றால் மாணவர்கள் நிம்மதி இழக்கின்றனர். குடும்பச் சூழல் ஒரு மாணவரின் கல்விச் சூழலைப் பாதிப்பதை,*

*''காலி மதுப்பாட்டில்கள்*
*பொறுக்கி விற்கும் கணவன்*
*மதுவில் சரிபாதி தரவில்லையென*
*சண்டையிடும் மனைவி*
*மதுவின் தீமைபற்றி மெய்சிலிர்க்கப்பேசி*
*பள்ளியில் பரிசு பெற்ற மகள்*
*குடும்பத் தொழிலையே கற்பிக்குமோ*
*எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு?*

*(வான் நோக்கிப் பெய்யும் மழை, பக்கம் 18)*

*என்று தன்னுடைய கவிதைகளில் சிந்திக்க வைக்கிறார்.*

*முடிவுரை:-*

*கல்வி என்பது பள்ளி, ஆசிரியர் மற்றும் மாணவர் சார்ந்த விஷயம் மட்டுமல்ல ஒட்டு மொத்தச் சமூகமும் சேர்ந்தது தான். இன்றைய நிலையில் கல்வி என்பது பெரிய ஒருவணிகமாக மாறிவிட்டது. கல்வி என்பது விலைப் பொருளாக மாறியுள்ளது. கற்க்கும் கல்வியினால் சமூக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சமூகத்தின் அடிப்படை அழகே கல்வி தான். க. மகுடபதி அவர்கள் தன்னை குடும்பச் சூழலிலும், சமூகச் சூழலும் தனிமைப் படுத்திக் கொள்ளாமல்*

*அவைகளுடன் இணைந்து கவிதைகள் மூலம் இன்றைய கல்விச்சிக்கல்களைப் பேசுகின்றார். அவரின் கவிதைகளில் உள்ள கருத்துக்களைக் தொகுத்துக் கூறி வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

*பயன்படுத்தப்பட்டநூல்கள்*


1. *இங்கிதம்அறிந்தநிழல்கள்,க.மகுடபதி,பொள்ளாச்சிஇலக்கியவட்டம், ஆகஸ்ட் 2019*
2. *வான்நோக்கிப்பெய்யும்மழை,க.மகுடபதி, பொள்ளாச்சிஇலக்கியவட்டம், டிசம்பர் 2020*
3. *பொதிசுமக்கும்நதிகள்,க.மகுடபதி, பொள்ளாச்சிஇலக்கியவட்டம், செப்டம்பர் 2022*
4. *பாரதியார்கவிதைகள், பாரிஆப்செட், ஜனவரி 2000*
5. *புத்தனின்தலையில்நூற்றியெட்டுநத்தைகள்,பூ. தனிக்ஷாபாரதி,பொள்ளாச்சிஇலக்கியவட்டம்,ஏப்ரல் 2022*
6. *கவிதையில்பயணித்தல், கஅம்சப்ரியா, அன்னைஇராஜேஸ்வரிபதிப்பகம், மே 2022*
7. *திருக்குறள், திருவள்ளுவர்*
8. *விருட்சங்களாகும்விதைகள், பாமா, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்*
9. *ஒருபள்ளிவாழ்க்கை, சமஸ், குளோபலியண்டிரஸ்ட்*


********* ********* ********** ********* ********* ********** ********** **********